2-10-1995
UNIVERSITY OF JAFFNA

Registered

# ஸன்மார்க்கபோதினி.

SANMARKAPOTHINI.

பத்திரவிலைவிகிதம்

ஷக்கு ரூபா க சதம் உ௫ தபாற்செலவு.
இலங்கைக்குசதம் ௫0
இந்தியாவுக்குசதம் ௫0
பிறதேசங்களுக்கு எ௫

ஒன்றுவிட்டொருசனிக்கிழமைகளிற்பிரசுரஞ்செய்யப்படும்.

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

விளம்பரவிலைவிகிதம்

வரி ஒன்றுக்குச்சதம் ௧0
௧0 க்குமேல்வரி க-க்கு௮
௯0 க்குமேல்............௬
இணைப்பிரசுரமொவ்வொன்றிற்கும் ௯-ல் ஒன்று

XXVII உஎம் புத்தகம — JAFENA 1st APRIL 1911 — யாழ்ப்பாணம் ககூகக ம் ஹு சித்திரை மீ கஉ சனிக்கிழமை. — No 7 சங்கியை எ

## நம் பத்திரவிதானம்,

நமது பத்திரிகையை இதுவரையும் நமது விதானந் தவறுமலே நடத்திவந்திருக்கிறோம் என்பது நமது துணிபு, ஒரு பத்திராதிபர் ஒரு மார்க்கனுசாரியாயிருத்தல் இன்றியமையாத அவசியம். அப்படியின்றி நிரீச்சுரவாதியாயிருந்தால் சகல துர்க்குணங்களுக்கும் அவரே மூலவேராயிருப்பார், கடவுள் இல்லையென்று வாதிப்பவன் எத்தீமையைத்தான்செய்யப் பின்னிற்பான்· அவன் அந்தரங்ககிரிகைகளில் ஆருக்குப்பயப்படுவான், அவ்விதமானோர் தான் மிருதிபற்றிக் கொலைசெய்தல், வீடுசுடல், திருடல், அபாயக்கருவிகளால் உயிர்களைமாய்த்தல் ஆகிய தீச்செயலிற் வகயிடுபவர். ஆதலால் நிரீச்சுரவாதிகளின் பத்திரிகைகளையும் பிரசங்கங்களையும் செய்கைகளையும் ஆதரித்தல் மிகக் கேடாகவேமுடியும் என்பது பிரத்தியட்சம.

காரியமிவ்வாறிருப்பதால்நாமும்கடவுளுண்டென்றும் அவர்க்குப் பயந்துநடக்கும் பகுதியைச் சேர்ந்தவராயிருப்பதும் துன்மார்க்கத்தையல்லச் சன்மார்க்கத்தைப் போதிக்கும் பகுதியைச் சேர்ந்தவராயிருப்பது முத்தமமென்று அறிஞர் யாவரும் ஒத்துக்கொள்வர். அம்மார்க்கம் எமமார்க்கமெனை ஆராயும்போது சித்தசமாதானத்துடன் ஆராயாமல் கட்சிப்பிரிவொடுகூடிய ஓர்புறச்சார்புடனிருந்து ஆராய்வதாலும் கடுமொழிப்பிரயோகத்தாலும் அது தேடவரிதாகின்றன· அப்படித்தேடினும தம்மினசனக்கட்டுப்பாடு சினேகிதர் உலகம் ஆகிய விக்கினங்கள் அதற்கிடையில்புகுந்து மனதைக் குழப்பிவிடுகின்றன. இன்னும் யாதுகோர்ந்தாலோ எவரும் தன்னிலையைத் தாழ்த்தார். இதுபற்றியே நாம் பொதுப்பத்திரிகையாய் நடத்தல் உத்தமமென்றுன்னி அவ்விதமே 26 வருடங்களாய் நடத்திவந்திருக்கிறோம், நமதுநிலையை நம்மதத்தை எவர் தூஷித்தபோதும் நாம் வாய்திறந்ததில்லை. இப்படியெல்லாம் நமது மனச்சாட்சிக்கு விரோதமாய் வாய்திறவாமலிருக்கச்செய்தது நமது பத்திரவிதானமே.

தற்போது நாம் பலசோலிகளிற் கையிட்டிருப்பதாலும் ஓர் உபபத்திராதிபர் இப்பத்திரிகையைநடத்த முன்வந்திருப்பதாலும் கூடியவரையில் முன்விதானங்களைக் கையாடிவர வேண்டுமென்று புத்திசொல்லி நடத்திவருவோம். ஆனல் அவசரங்காணும்போது அவர் தம்மனச்சாட்சிக்கு விரோதமாய்ப்பேசப் பிரியமற்ருல் நாம் ஒன்றுஞ் செய்யக்கூடாது. ஆகவே நாமவிதித்த முந்தியபத்திரவிதானங்களையெல்லாந்தள்ளிவிடுகிறோம். இனிப்பத்திராதிபரின்சித்தப்படியேபத்திரிகைநடத்தப்படும்.

ஏனெனில் இதுகாறும் நாம் பத்திரிகைநடத்திவந்த ஒழுங்கில் எவராவது குறைகூறுதவிட்டாரா? "குற்றமேதெரிவோர் குறுமாமுனி சொற்றபாவிலுமோர் குறைகூறுவர்" என்பது ஆன்றோர்வாக்கு. நம்பத்திரிகை பொதுப்பத்திரிகையென்று பெயர்பெற்றும் ஓர் மதசார்புடையதென்று பேச்சினுலும் எழுத்தினுலும் சில அறிவீனர் காட்டிவந்திருக்கிறார்கள். இப்படியாவதுநடத்திவர அவரா லியலாதிருப்பதினுற்றான் அப்படிக் கூறுகிறார்களென நாம் அனுமானித்தோம். அவ்விதமான போலிப்பேச்சுக்காரரின் வாய்க்குள் அகப்படாமலே நம் பத்திரவிதானத்தை நீக்கிவிட்டு நமது இஷ்டமாய்ப் பத்திரிகை நடத்துவோமென வெளியிடுகிறோம். இனி அவர் வீண்பேச்சுகள் அடங்கியிருக்கட்டும், என்றும் நமது கௌரவத்தைக்காத்தே பத்திரிகை நடத்தப்பட்டுவருமென அறிக.

## சன்னிவாதசுரத்தி லெண்ணெய்.

செவ்வியர்தா னிலக்குமிழ்வேர் சிறுமூலக மிந்துப்புமிள, செவ்வமிலலாத்திற்பலியோ டிலவங்கம்வெட்பாலரிசி, குவ்வுளோரெண்சீதேவி குலவும்வசம்பேசுரமூலி, கவ்வையொத்த தகரைகண்டங் காஞ்சிவகைவேற்கொம்பே,

கொம்பேவெளுத்தலமுகிராய் கூறும்விளா வாளுவையிலை, வம்பேசெறியுமரமஞ்சல் வளர்சிறறமட்டி ருஞ்சீரம், நம்போரொன்று கழஞ்சுகொண்டு நருக்கியரைத்துக் கரைத்ததிலே, நிம்பக்கிலமேரண்டனெண்ணெய் நிறையிற்கூட்டியெரித்திடுமே.

## பதார்த்தசாரம்.

### துளசி. Ocimum Sanctum.

இதில் பலஇனம் உண்டு. எறக்குறைய எல்லாவற்றிற்கும் கற்பூரவாசனையுண்டு. குணமும் முன்பின் ஒத்திருக்கும். திருநீற்றுப்பச்சையும் இவ்வகுப்பைச் சேர்ந்ததுதான். தேகஅனலையுண்டாக்கி வெயர்வையைப்பிறப்பித்துக் கபத்தைநீக்குந்தன்மை எல்லாவற்றிற்குமுண்டு. இதன் இலையைப் பொடிசெய்து நசியமிட்டால் பீனிசப்புழுக்களை வெளிப்படுத்தும். உள்ளுக்குக் கஷாயமிட்டுக்கொடுத்தால் கபதோஷம், வயிற்றுமுறுக்கு, அஸ்திசுரம், கோழை, கண்டக்கிரந்தி, மாந்தசுரம், தாகம், அரோசகம், இருமல், சலதோஷம், ஆகியவைகளை நீக்கும். இலையைப் பிட்டவித்துச் சாறுபிளிந்து அதில் இரண்டுஅவுன்சுஎடுத்து எலுமிச்சங்காயளவு பசுவெண்ணெய்சேர்த்து மூன்றுநாட்கொடுக்கப் பிரமியம்நீங்கும். செந்துளசி கபாதிக்கம், திரிதோஷம், அக்கினிகிடவிஷம் இவைகளைமாற்றும். கருந்துளசி தொண்டைக்கோழை, கரகரப்பு, காசம், கிருமி, இருமலினுல்வரும் இழுப்பு, இரைப்பு, மார்புச்சளி, சன்னிபாதசுரம் இவைதீர்க்கும். நாய்த்துளசி பொடியிருமல், கோழை, சன்னிபாதசுரம் இவைதீர்க்கும். சரீரத்தைப்போஷிப்பிக்கும், நிலத்துளசி கணச்சூடு, வாதசுரம், மந்தசுரம், குளிர்சுரம், பித்தாதிக்கம் நீக்கும். கல்துளசி விததிரிதிக்கட்டி, கபம்புறப்படுஞ்சுரங்கள், நெருப்புக்காய்ச்சல்தீர்க்கும். முட்துளசி எலிவிஷம், வெட்டுக்காயம், புண்தீர்க்கும். எலுமிச்சந்துளசியின் (O Geratissimum) கொட்டையைச் சலத்தில் ஊறவைத்தால் பிசுபிசுப்பாய்வரும், அதை வெட்டைநோய்க்குக்கொடுத்தால் நயம்காணும். இதைப் பிள்ளைகளுக்கு உண்டாகும் அக்கரத்துக்குக் கொடுத்தால் நயமுண்டாம். வாதம் சோர்வு இவைகளுக்கு இதன் கஷாயமும் புகைகளும் நல்லதென்று கண்டிருக்கிறது· இலையைச் சலத்திலிட்டுக்காய்ச்சி ஸ்நானஞ்செய்யவும் வேதுபிடிக்கவும் உத்தமமானது. நசைகளை அழுகாதுகாப்பதற்கும் இது நல்லமருந்தென் றெண்ணப்படுகிறது. துளசிச்செடிக்குள்ளிருந்த பிரேதம் நெடுநாளாய்ப் பதனழியாது காக்கப்பட்டிருந்ததாகச் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அதனுல் இதன்விசேஷம் இன்னும் பரீட்சிக்கத்தக்கது.

## யாழ்ப்பாணம்.

ஊர்ச்சீர் – வெயிலகோரந்தாங்கரிது. மழையில்லை. காலையிற் சிறுகப் பனியுண்டு. காயச்சலாதியரோகங்கள் இன்னும்நடமாடுகின்றன.

பெருந்திருட்டு—இரண்டுமூன்று தினங்களின்முன் யாழ்ப்பாணத்தில் நாட்டுக்கோட்டைச் செட்டிகடையொன்றிலிருந்த சமையற்காரன் தொகையான கடதாசிநாணயநோட்டுக்களையும அடகுபிடித்த நகைகளையும் திருடிப்போய் வேறொரு செட்டிகடையின் வைக்கோற்பட்டடைக்குள்ஒழித்துவைத்துவிட்டுப் புறப்பட்டுவிட்டானும், சிலர்நாலுபுறத்திற்கும் வண்டிகட்டியோடி நல்லூர்ப்பலக்கத்தில்திருடன் பிடிக்கப்பட்டுச் சண்டாளமர்த்தனஞ்செய்யப்படவே காரியத்தின் உண்மையை வெளியிட்டு ஒழித்த பணங்களையும் நகைகளையுங் கொடுத்துவிட்டானும். இதற்கு ஒழித்துவைத்த இடத்திலிருந்த சமையற்காரனும் ஒத்தாசையென நம்பப்படுகிறது.

ஸ்ரீ சி· அரியகுட்டியாரவர்களின்தேகவியோகம்—இவர் சென்ற 22உ மானிப்பாயில் தமதுகிரகத்தில் தேகவியோகமாயினர்· இவரது கனிஷ்டபுத்திரன் ஸ்ரீ வயித்தயலிங்கம் காவியில் வொல்காட்பிறதேஷ் கொம்பனியில் ஸ்ரோர்க்கீப்பராயிருந்து சமீபத்தில் காலஞ்சென்றவர்· இவரது சிரேஷ்டபுத்திரன் ஸ்ரீ சுவாமிநாதபிள்ளையவர்கள் நிஜிஸ்ரூர்கந்தோரில் வேலையாயிருக்கிறூர். இவரது புத்திர பவுத்திராதியருடன் நாமுஞ்சேர்ந்து புலம்புகிறோம்.

கையொப்பவரவு,
இல்லாலே

ஸ்ரீ இ. குசைப்பிள்ளை வைத்தியர் 1—50
,, சு. அருணாசலம் அச்சுவேலி 1—00

லேடிமக்கலம் — இக்கப்பல் காங்கேசன்துறையிலிருந்து சித்திரைமீ 7உ பரித்தித்துறை வழியாயும் 17உ பாம்பன்வழியாயும் செல்லும்.

மரணசங்கதி—நம்மூர் N. V. யோசேப்பு உபதேசியாரின் புத்திரன் மெஸ், E. G. N. யோசேப்பு கொழும்பில் காலஞ்சென்ற துயரசங்கதியைக் கடிதநிரையிற் காண்க. இவர்க்காய்த்துயருறும் பெற்றோர் சகோதரர் சகோதரி மனைவி மைத்துனராகிய சகலருடனும் கம்மனுதாபமுமிருக்கிறது.

ரோட்டுகளின்சீர்கேடு—யாழ்ப்பாணம் பருத்தித்துறைரோட்டிருந்து பிரிந்து நம்மூருக்கூடாகத் தொண்டமானாற்றுக்குச் செல்லும்ரோட்டுப் பகிரங்கவேலைப்பகுதியார் பொறுப்பிலிருந்தபோது நன்னிலைபரத்திலிருந்தது. இப்போது பள்ளமுந்திடருமாயிருப்பதினால் ரோட்டுக்கொம்மிற்றியார் கவனஞ்செலுத்தவேண்டும். மானிப்பாயிலிருந்து பண்டத்தெருப்புக்குச்செல்லும் ரோட்டும் புழுதிகொம்பிப் பழுதடைந்திருக்கிறது. அதையுங் கவனிப்பாரென்றுநம்புகிறோம்.

சிசுவதை—புத்தூரில் ஓர் சிசுவைக்கொன்று சாக்குக்குட்கட்டிப் போடப்பட்டிருந்ததாய்க் கொழும்புப்பத் திரமொன்று கூறுகிறது. இவ்வித தீச்செயல்களைக் கண்டுபிடித்தல் அவசரம்.


தபால்ஒழுங்கு—தபாற்கந்தோரின் தற்கால ஒழுங்கின்படி கடிதமாவது வேறுபொருட்களாவது நாலுஅவுன்சு நிறைமட்டும் ஐந்துசதமுத்திரைக்கு அனுப்பக்கூடும்.

## நோய்தீர வுபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உப்பு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்ஸன்) காரணம். தூர்ப்பலமாயும், ரோகம் முதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாதது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்கிறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும், ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணங் கேளுங்கள்:—முதுகுநோய், தூக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமா யிறங்குவது, மூத்திரம் நிறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலவீனமான இருதயம், தலைநோவு; தைரியமில்லாமை, கண்பார்வையின் மந்தம், தலைச்சுற்று, கீல்களும், சதைகளும் புண்ணாகி அசைக்க முடியாமற்போவது, மறதி, சாதாரண பலவீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால், கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், திமிர்வாயு, மகோதரம், பகு மூத்திர ரோகம் முதலானவைகளும், ஸ்திரீரோகமென்று தப்பாக எண்ணிக்கொள்ளும் ரோகங்களும்.

(டோண்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோக மாத்திரைகள், மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால், சரீரசுகம் தப்பாமல உண்டாகும். சுகமாய் இருக்கவேண்டுமானால் மூத்திரப்பை ரோக மடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள்வதற்கு ஏற்ற மருந்து (டோண்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.




ஒரு புட்டி விலை, ரூபா. .... 2 0 0
6 புட்டியின் விலை, ரூபா. .... 10 8 0

இவை, சிமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜன்ட் ஆபட்பிஸ்பு. ஏச். தம்லர் துரையவர்களிடத்திலும், கிடைக்கும்.

## இலங்கை

குடிசன மதிப்பு—சென்ற 1o உ இரவு எடுத்த குடிசனமதிப்பில் இலங்கையிலுள்ள இராணுவத்தாரையும் கப்பலிலுள்ளவர்களையும் நீக்கி மற்றைய குடிசனங்களின்தொகை 4092973 பேரென்பதாய்த் தெரியவருகின்றது. சென்ற 19o1ஸ் எடுக்கப்பட்ட குடிசனமதிப்பின் தொகையிலும்பார்க்க இப்பொழுது 527019 பேர் அதிகமாயிருக்கிறார்கள். இராணுவத்தைச்சேர்ந்தவர்களையும் கப்பலிலிருந்தவர்களையுஞ் சேர்த்துப்பார்த்தால் 4o96o21 பேராகின்றார்கள். 1901ஸ் இராணுவத்தையும் கப்பலிலுள்ளவர்களையும்நீக்கி 3565954 பேராகவிருந்தது. இராணுவத்தவரையும் கப்பலிலுள்ளவர்களையுஞ் சேர்த்து 3582697 பேராகவிருந்தது. சென்ற பத்துவருஷத்தில் 500000 பேர் அதிகரித்திருப்பது பெரியகாரியமாகவிருந்தபோதிலும் 1891 க்கும் 19o1 க்குமிடையில் 561118 பேர் அதிகரித்திருக்கிறார்கள். சென்ற பத்துவருஷத்தில் நூற்றுக்கு 14-75 வீதம் அதிகப்பட்டிருக்கிறது. 1871 க்கும் 19o1 க்குமிடையில் நூற்றுக்கு 48 வீதம் அதிகரித்திருக்கிறது.

சிவில்உத்தியோகஸ்தரும் சுதேசபாஷைகளும்—சிவில்உத்தியோகஸ்தரை இரண்டாம்வகுப்புக்கு உயர்த்தவேண்டுமென்று இலங்கை மந்திரியாருக்குச் சிபாரிசுசெய்ய வேண்டுமானால் அவர்கள் சுதேசபாஷைகளாகிய சிங்களமும் தமிழும் நன்றாய் எழுத வாசிக்கப் பேசத் தகுதியுடையவரோ என்பதின்மேலே அரசாட்சியார் திருத்திப்பட வேண்டுமென்று தேசாதிபதியவர்கள் கெசற்பத்திரிகையிலே விளம்பரஞ்செய்திருக்கிறார். தற்கால நியாயதுரந்தரர்சிலர் ஓர்உறுதியை வாசித்து விளங்கவுஞ் சக்தியற்றிருக்கு மிக்காலத்தில் இது தக்க ஏற்பாடே.

பொலிசுஆபீசர் சுடுபட்டிறத்தல்—பொலிசின் உபதலைவரான மெஸ், மெயின்உவாணிங் என்பவர் அனுற்காமத்துக்குச்சென்று அங்கே பொலிஸ்ரேசனைப் பார்த்துவரும்போது ஒருபொலிசு நிறையக்குடித்து வெறியாய்க்கிடப்பதைக்கண்டு அவன் தலைமேலே ஒருவாளி தண்ணீரை ஊற்றும்படிசொன்னார். தண்ணீர் ஊற்றியவுடன் அறிவுதெளிந்து எழுந்தான். அப்போதுபொலிசுத்தலைவர் இன்ஸ்பெக்றரைப்பார்த்து அவனுக்கு 2 ரூபா பணத்தெண்டமவிதிக்கவும் ஒருகுற்றக்கிறுவைக்கவும கற்பித்தார். பொலிசுபோய் மறுபடிவந்துபொலிசுத்தலைவர் ஆபிசிலிருக்கும்போது பின்னாலேபோய் அவருக்குத்துவக்காலே வெடிவைத்துவிட்டு மறுபடியும் சுண்டிழுக்கினான். இன்ஸபெக்றர் உடனேபாய்ந்து அத்துவக்கைப் பறித்து அவனைக்காவலிலேஅடைத்தார். அவன்கத்தியைஉருவித் தனக்குச்சமீபமாகவருகிறவர்களைச் சங்கரிப்பதாகச் சொல்லிக்கொண்டுநின்றான். பொலிசுத்தலைவரை வைத்தியசாலைக்குக்கொண்டுபோவதற்கு றெயிலிலேற்றும்போது குண்டுஅவருடைய இருதயத்தைஊடுருவிச்சென்றதினால் உடனேஇறந்தார்.

மோட்டர்வண்டி ஸ்தாபனம் — சிலாபத்திலிருந்து புத்தளம்வரைக்கும் மோட்டர்வண்டி ஸ்தாபித்தற்குவேண்டிய வெத்தனங்கள் செய்யப்படுகின்றனவாம்.

## சிறுவர்கள் நற்சுகம் அடையும்படி

பெற்றோர் அதிக கவனமாயிருக்கிறார்கள். சிறுவன சந்தோஷமற்றிருந்தாலும் சாப்பாட்டில் நல்லவிருப்பமில்லாதிருந்தாலும் இதை அவனுக்குக் கொடுக்கிறதற்குப் பின்னிற்கவேண்டாம்.

### ஸ்கொற் இமல்ஷன்

என்னும் மருந்தில் சிலதுளிகளைப் பாலுடன்சேர்த்து அவனுக்குக்கொடுத்தால் பெரிய மாறுதலை உண்டாக்கும். அவன் சந்தோஷமும் உற்சாகமுமுள்ளவனும் சாப்பாட்டுப்பிரீதியுள்ளவனும் நற்சுகமுள்ளவனும் வருவான். இதுவே நற்சுகத்தின் அடையாளம்.



எப்பொழுதும் இந்த ஸ்கொற் மீன்பிடிகாரனின் அடையாளமிட்ட 'Emulsion' இமல்ஷனைப் பார்த்துவாங்குங்கள்

கையால் தொடப்படாது

எல்லாமருந்து வியாபாரிகளிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

SCOTT & BOWNE LTD
MANUFACTURING CHEMIST
ENGLAND LONON

இலங்கைக்கலலூரிச்சங்க சபை— இச்சபை சென்ற 17 உ வெள்ளிக்கிழமை காலைரமணியளவில் றிஜிஸ்திறார்ஜனறல் ஆபீசில் கூட்டப்பட்டது. றிஜிஸ்திறார்ஜனறல் மெஸ், பொ, அருணாசலமவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். டக்டர் எச். எம். பர்ணாந்துவும், மெஸ். ஜேம்ஸ். பீரிசும், மெஸ், ஜே. சு. ஆர். பெரராவும், மெஸ். ஏ. பீ. சௌந்தரநாயகமும், மெஸ். ஜே. ஏ. குணரத்தினமுதலியாரும் (காரியதரிசி) பிரசன்னராயிருந்தார்கள்.

## வர்த்தமானத் திரட்டு

அரசாட்சியான் கிருஷிசமுயற்சி—சென்னை அரசாட்சியார் தென்னிந்தியாவில் விவசாயத்தை விருத்திசெய்யு நோக்கமாய்ப்பலவிடங்களில்விவசாயப்பண்ணைகளை அரசினர் சலவிக் ஸ்தாபித்து ஏர், ஆழவுழவு, பலவிதமான தானியங்களைப்பயிரிடுதல் இவைபோன்ற விஷயமாய்ப் பலசோதனைகள் செய்துவருகிறார்கள். கோயமுத்தூர், கோவில்பட்டி, தஞ்சாவூர், சாமல்கோட், செங்கற்பட்டு, பாலூர், ஹகாரி, பெல்லாரி முதலியடலவிடங்களில் அரசினர்பண்ணைகள் இவ்விதமாய்நடத்தப்படுகின்றன. இலங்கை அரசாட்சியும் இலங்கையின் பலபாகங்களில் விவசாயப்பண்ணைகளை ஸ்தாபித்திருக்கிறது. டகையிலைச்செய்கையை நல்லமாதிரியாக்கவும உயர்ந்தவிலைப்புகையிலைகளைச் செய்கைபண்ணிப்பார்த்து சனங்களைத்தைக்கொண்டு செய்தற்கும் முயற்சிக்கிறது. பருத்திமுதலிய விளைபொருள்களைவன்னிப்பகுதியில்விளைவிக்கவும் கரும்புமுதலியவைகளையும் வேறுபலபொருள வருவாய்வரத்தக்க தானியங்களையும் விளைவிக்கவும நோக்கமுண்டு.

ருசியாவில்அடிமைகளை மீட்டதினம்—பங்குனிமீ ௩உ ருசியாதேசத்தில் அடிமைகள் அடிமைத்தனத்தினின்று தற்காலசக்கிரவர்த்தியின்பாட்டனாருடைய கட்டளையால் மீட்கப்பட்டதினத்தில் யுபிலிகொண்டாட்டம் எங்கும்மிகச்சிறப்பாய் நடந்தது. செண்ட்பீட்டர்ஸ்பர்கு மேற்றிராசனக்கோயிலில் 'தேதேயும்' சங்கீதத்தோத்திரம் நடைபெற்ற தேவப்பணிவிடைக்கு சக்கிரவர்த்தியும் அவர்தேவியாரும் தாயாரும் விஜயஞ்செய்தார்கள். 'அடிமைகளைமீட்ட அரசருக்கு' என ஞாபகசின்னங்கள் திறக்கப்பட்டன. ராணுவக்காட்சி, உபந்நியாசங்கள், விளையாட்டுகள், ஏழைகளுக்கு அன்னதானமளித்தல் முதலானகிருத்தியங்களும் நடைபெற்றன.

ஜோட்பூர்மகாராசா—இவர் சுரத்தாற்பீடிக்கப்பட்டு மரித்துப்போனார். இவருக்கு 3 குமாரரும் 2 குமாரத்திகளுமிருக்கின்றனர்.

தீவாந்திரத்தீர்ப்பு—கோயமுத்தூரைச்சேர்ந்த கோத்தகிரியில் தெலுங்க நாவிதபெண் ஒருத்தி தான் சோரமார்க்கமாய்ச்சம்பாதித்த சிசுவைக்கொன்றதால் கோட்டில் விசாரணைசெய்யப்பட்டபோது தனக்கு இருபெண்குழந்தைகள் சீவந்தராயிருப்பதாகவும் பின்னூற்பிறந்தகுழந்தையும் பெண்ணாகவிருந்ததினால் வெறுப்புற்றுத் தானே கொன்றதாகவுங் குற்றத்தை ஒத்துக்கொண்டதால் 20 வருடக் காவல்விதித்து அந்தமான்தீவுக்கு ஏற்றியனுப்பப்பட்டாள்.

சீனரின்சமாதானப்பிரதியுத்தரம்—ருசியரால் கடைசியாய்கேட்கப்பட்டகேள்விகளுக்குச் சீனரின் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கும்பதில் கூடியவரையில் திருப்திக்குரியதென்று சிலவிஷயங்களுக்குமாத்திரம் தெளிவானவிபரப்பதில் வேண்டுமெனச் சீனரிடம் ருசியர்கேட்பார்களென்றும் எண்ணப்படுகிறது. தேயிலை வியாபாரவிஷயமாய்மாத்திரஞ் சிலஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவென்றும் ருசியாவுக்கு வியாபாரச்சுதந்திரம் பூரணமாய்க்கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்றும் சீனரின் பிரதியுத்தரக்கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

போர்த்துக்கல்நிலைமை—லிஸ்மால் என்னுமிடத்தில் வேலைநிறுத்தஞ்செய்த இருவர் சுடப்பட்டார்கள். இதைக் காரணமாய்வைத்துக்கொண்டு பொதுவாய் வேலைநிறுத்தஞ்செய்யவும் வேறுவிதமாய்ப் பல தொந்தரைகளைப்புரியவும் வேலையாட்கள் முயன்றுவருகிறார்கள். டிராம்வண்டிவேலையாட்கள் வேலைசெய்யமறுத்துவிட்டனர். வண்டிகளை எதிர்த்துத்தாக்கியவர்களில் அனேகர் கைதிசெய்யப்பட்டனர். கைதிசெய்யப்பட்டோரில் யூனியனிஸ்ட்கட்சித்தலைவர்களும் பலர். லிஸ்பன்நகரத்தின் 20உ ஒருபத்திரிகையாவது வெளிப்படவில்லை. அச்சியந்திரசாலைகளின் வேலைகாரர் யாவரும் ஒன்றித்து வேலைக்குப்போவதில்லையெனக் கட்டுப்பாடுசெய்துகொண்டே வேலைநிறுத்தஞ்செய்திருக்கிறார்கள்.

ஆகாயவிமானம்—சுவிற்சலந்துதேசத்து ஆகாயவிமானியொருவர் தனதுஇரதத்திலேறி 56 நிமிஷத்தால் 41 மைல் நீளமுள்ளஜெனிவாவாவியின் ஒருகரையிலிருந்து மறுகரைக்கு ஆகாயவழியாய்ச் சென்றனர். வேறுஅமரிக்கதேசத்து ஆகாயவிமானிஒருவர் பூமியிலிருந்து 1 மைலுக்கப்பால் தனதுவிமானத்திலிருந்துகொண்டு தந்தியில்லாத மின்சாரத்தபாற்செய்திகளை அனுப்புவதிற் சித்திபெற்றனராம்.

ப்பும், அதின் முறபுறப்பகதல், மற்றும் ஆலயவுடபாகம், கோவில்முகப்புச்சோடிப்பு, கேர்வாசல், ரோட்டுப்பந்தர், ரோட்டுநீட்டுத் தோரணங்கள், பந்தர்கள், அலங்கரிப்புவேலைகளைப் பகுதிபகுதியாய்க்குறித்துத் திட்டஞ்செய்துவிடப் பந்தர்கள் ஒன்றையொன்று வென்றனவாய்ப் பகுதிபகுதியார் ஒன்றித்து வெகு சித்திரவிசித்திரமாய் மாம்புரியில் முன் ஒருபோதுமில்லாத மகா மாட்சிக்குரிய அருங்காட்சியென் றெவரும் பிரமிக்கத்தக்கபான்மை வர்ணிக்கத்தக்கதன்றாகவும், பல வர்ணக்காகிதப் புஷ்பச்சீர்மைமாலை அலங்கிர்தங்களால் ஆலயமும் கண்கொள்ளாக்காட்சியுற வெளிப்பாகமும் ரோட்டுநீட்டுக்கு அரைமைல்தூரமளவுந் தோரணங்களும் பல வர்ணக் காகிதநவசக்கொடிகள் பளிரெனஎங்கும் காற்றிலசைவா னிரைந்துநிற்க, பலசாதி பலமதஸ்தினரு மீதேது நவீனஆடம்பர குதூகலிப்புப் பூச்சியகொண்டாட்டமெனக் காட்சிபார்ப்பான் குழுமிவரவும், இப்பாசுமீசாம் கிறீஸ்துசாயித்தினரீசற்குனாம்போல் புறப்பட்டு வந்தசோ, மேற்படி ஆலயக் கிறீஸ்துவாவோரும் பிரபுக்களும் கட்டளைச்சுவாமியாருடன் கொடிகள்கரத்தேந்தி எதிர்கொண்டுசென்று அரைமைல்தூரம்வரை மாம்புரி ரோட்டுஓவசியர் மெஸ், கணபதிப்பிள்ளை போசேப் அவர்களது சித்திரவிசித்திரப் பந்தரின்கீழ்ச்சென்று காத்துநிற்க, காலை சுமார் 9 மணிக்கு ஆண்டவரவர்கள யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச்சேர்ந்த புறக்கியூற்றரான வித வண. ஜே. பீ. பூலாங் சுவாமியார் கொழும்பு அதிமேற்றிராசன புறக்கியூற்றராகும வண. ஙரியே சுவாமியார், வண. சி. மாசியெற்சுவாமியார்சகிதமாய் அசுவரதநடராய் வந்திறங்கவே, கட்டளைச்சுவாமியார் கின்று மினவிஉபசரிக்க ஆண்டவரவர்கள் புளகிர்தகாந்திபொருந்திய வதனமலர்ச்சியுடன் சுவாமியாரைத் தமதருகிலமரச்செய்ய, சமூகமாய்நின்றோருள் மேன்பிரபுக்களே அசுவத்தை அவிழ்த்து இரதத்தை இழுத்துச்செல்லச் சமஸ்தரு மேகமாயோக மகிழ்ச்சி பக்தியுருக்கமா யிழுத்தநகர, கட்டுவமுட்டு நாகசின்னங்களொருபக்கமும் வசந்தன் இலைசைப்பாக்கள் மறுபக்கமும் சீனவெடியாதியாம் முழக்கங்கள் ஓயாதொரேசிராய்ச் செவிலைய அடைப்பதாகவும் மெஸ், பெனடிக்ற் அவர்கள் தம்கிரகத்திற்குமுன்னிதாயிட்ட அலங்கார பந்தரின்கீழாய்ப் போந்து ஆலய முகப்புச்சேரவே ஆண்டவரவர்கள் குருமாருடன் கோயிற்படியேறவும் வண, கட்டளைச்சுவாமியார் தீபதூபங்காட்டி உபசரித்தேற்க, சனங்கள் இருதாண்மடித் தேகமாயமர ஓர் வாழ்த்துப் பத்திரம் சுருக்கமாய்வாசிக்கப்பட்டது. அதற்கு ஆண்டவரர்கள் ஒருபுசமிருபுசமாய்ப்பூரித்துப் புன்முறுவல்கொண்டு ஆலயத்தை மேல்நோக்கி மிக்க சித்திரவித்திரமாய்ச் சிங்காரிக்கப்பெற்ற உங்கள் பந்தர் ஆலயசிங்காரங்கள் புத்தளத்தி லில்லையெனவும் உங்கள்பாகத்தில் இத்தகை நிறைந்தசனங்களிருக்கக்கூடுமெனவும் இவ்வித பிரமாண்டமான கோயிலிருக்குமெனவும்நாம்கருதவில்லையென்பதாகவும், புத்தளடிஸ்திறிக்கில் இத்தஆலயம் மிகவிசேஷித்ததென்றும், இது சிறந்த ஒருசிறுபட்டினமெனவும், இன்று எமக்கு உஙகளால்செய்யப்பட்ட வணக்க உபசாரணைகளெல்லாம் நாம் பரிசுத்த பாப்பாண்டவரின் மந்திரியாகுமளவில் இது எல்லாப்பரிசுத்தபிதாவுக்கே செய்யப்பட்ட பூசனையாகுமென்றும் நாம் அர்ச். பாப்பாண்டவரண்டை செல்லுந்தருணம் அதையெல்லாம் ஒப்புக்கொடுத்து உங்களைநினைக்க மறக்கமாட்டோமெனவும் உங்களுடைய இந்த வணக்கஉபசாரணைமுயற்சிகளெல்லாம் உங்கள வண. கட்டளைச்சுவாமியாருடைய மூலமேயென்றும் நீங்கள் (Very Good Parish Priest) மெத்தநல்ல ஒரு கட்டளைச்சுவாமியாரை அடைந்துகொண்டதைப்பற்றி எமக்கு மிரம்பிய சந்தோஷம் எனவும் இங்கிலீசில் திருவாய்மலர்ந்து ஆசியளித்தபோது யாய்க் குருமனைபுக்க அங்கும் சனத்திரள்நெருங்கிமோதுவதாயிருக்க ஆண்டவரவர்கள் இமைப்பாறவும்முடியாது நெருங்கிநிற்குங் குழந்தைகளைப் பகுதிபகுதியாய் ஓயாதுதாவிஅணைத்து முத்தஞ்சொரிந்து யேசுநாதசுவாமியைப்போல ஆசியளிக்கும் பேறுடையாயே வெகுநேரங்களைச் செலவழிக்கலாயினர். விசேஷமாய் ஆண்டவரவர்களது இரக்க உருக்க தயாள உதாரகுண குபேரலட்சணங்களை உணர்ந்து விளக்குவதாயிருந்தஇலக்கு குழந்தைகளிலேயே விசேஷ ஆவல் அன்புபொருந்தியவராய் விளங்குகதாயிருந்ததே. உருமத்தின்போது தாம்வந்த அபிப்பிராயகாரியாதிகளை நிறைவேற்றிப் போசனம் முடித்துச் சாயந்தரம் மீண்டுஞ் சகலர்க்குந் தரிசனமீய்ந்து ஒவ்வொருவராய் மோதிரமுத்தியாசியருளி, கட்டளைச்சுவாமியாரால் ஆண்டவரவர்கள் குருமார் சனங்களையமரச்செய்து போட்டக்கிருவ்படம் எடுக்கப்பட்டுமுடியச சுவாமியார் தேயவாதனமாய காமுத்திசெய்து வழிவிட நாலுமணியளவில் குருமாருடன் சக்தானுதிருப்பதிக்குப்பிரயாணமாயினர். வண. கட்டளைச்சுவாமியார்மூலமாய் மேற்படி குருமனை அலங்கரிப்புப் பந்தர்ச்சோடினைகளாதியாங்கருமங்களில் மெஸ், எ. பெனடிக்ற், மெஸ, எ. லிங்கப்பா, மெஸ், எஸ. எம். மனுவிற்பிள்ளை பீஸ்ஒப்பீசர், மெஸ், எம். ஜே. செல்லையாபிள்ளை ஆகிய இன்னுஞ்சிலபிரபுக்கள் மிகவும் ஊக்கமாய்நடாத்திச் சிறப்பித்த இவர்களது பிரயாசமே எம்மூர் இத்தகை பட்டினமெனப் பெரும்மகானின்பெருமையடைந்து பரிசுத்தபிதாவின் ஸதான ஸ்துதிப்பாகிய சிலாக்கியம்பெற்று அழகார்ந்த பூஷணத்தைத் தரிசித்துக்கொண்டது, மேலும் இவ் வின்னும் சிறப்புகளில் முயற்சியாய்நின்ற சிலர் நாமங்களை ஒவ்வொன்றாய்க்காட்ட இப்பத்திரிகையின் வை-

யொப்பககாரரல்லார் நாமங்களைத்தோற்றல் பத்திராதிபதானவிதானத்துக்குப்பொருந்தாதென்பதினும் பத்திரிகை யிதனை எழுதுபவருக்குச் சொந்தமல்லவென்பதாலும் விசனமெனக,

இங்ஙனம், காட்சி.

---

கற்பிட்டி.

மெஸ், எஸ். எம். மனுவிற்பிள்ளை பீஸ்ஒப்பீசர் இப்பத்திரகையொப்பக்காரனும் 9 வருடகாலங்களாய் மிக்க நேர்மை பிரமாணிக்க சிரத்தையுடன் அரசாட்சியாருக்கு மிகத்திருப்திகரமாய் மாம்புரிப் பீஸ்ஒப்பீசராய்ப் பணிவிடைபுரிந்துவந்த இவர் நடுப்பராயத்திலே வெகுங் காத்திராதவிதமாய்த் தாமாய் வலிந்தெழுதி வேலையிலிருந்து இளைப்பாறிக்கொண்டசெய்தியானது அவரையறிந்த பலர்க்கும் வியப்பையும் வியசனத்தையுங் கொடுக்கலாயின. இவர் ஊரவர்களுடன் சமாதானநிலையில் மனச்சாட்சியதிபூண்டு வெகு திட்பநுட்பயுக்திக்கூர்மை சாமர்த்திய திறமையுடன் கடமைபுரிந்து வந்தவராகையின் சிலகாலத்துக்குமுன் புத்தள ஏசன்றாயிருந்துசென்ற மெஸ். கூச்சன்துரையவர்கள் இவரை ஓர்சருணத்து விழித்து இவர் உத்தியோககடமை புரியுந்திறமையை மிக நயந்து வியந்தும் மற்றும் உத்தியோகஸ்தரும் இவரைக்கண்டு பாவித்தாலோ வெனவும் வற்புறுத்திப்பேசலாயினர். இவர் உத்தியோகம்நடாத்திய இதுகாலவரை இவரது கிராமவெல்லைக்குள் 4 வழக்குகளே கோடேறியிருக்கின்றது. இதிலும் ஒன்று சிவில்வழக்கேயென்றால் இவர் தம் சுயநயநாட்ட வேட்டைப்பிரியரல்லவென்பதும் வியாச்சிய பிணக்குகளை ஒப்பசெப்ப சமாதானநிலையில் முடித்துவந்தாரென்பதும் போதருவதாக, இவர் உத்தியோகத்தால் தாம் நீங்கிக்கொண்டது எத்தரையார்க்கு விதனத்துக்குரியதாகுமென்று சொல்லாமலே விளங்குவதாகும். இவரது உத்தியோக பிற்காலசேவிய கீர்த்தி மனச்சான்று ஆதி பலஉத்தியோகத்துக்குப் பொருந்திய லட்சணங்களைக்குறித்தப் பலர் சன்மானசணிசமா யிவரை மெச்சுவதை செக்கிதன் பலதருணஞ் செவிக்கேறலாயினன். இப்பாக மறுபக்கங்களில் பொலிஸ்தலைமைவேலை மாறிமாறிப்பார்த்தார் அனேகரர்இனு மிறந்தவரல்ல, சீவந்தராயேயிருக்கின்றார்கள். இவர்மாத்திர மங்ஙனமாகாது பல்லைக்கடித்த க்கொண்டிருந்தவர்போல் தம் யூகமதியால் அவ்விதம் பிடிகொடாது குறைகுற்றக்தாக்காளராதுந் மட்டுமரியாதை உத்தியோககணிசத்துடன தாமாய் விலகிக்கொண்டார். இவர் இற்றைக்கு 5 வருடங்களாய் டிவிசன் ஆபீசராயும், இன்னும் 8 முறைகளில் றெசிஸ்ருர் உத்தியோகமும், 7 முறைகளில் உடையார்வேலையும் அக்டிங்காய் வதல்கடமைபுரிந்தம் உத்தியோகஉயர்வு பெறத் தகமையானுயிருக்க "வெண்ணெய்திரளுமுன் தாளிஉடைந்தது"போல் வேலையால்நீங்கிக்கொண்டது விசனத்தக்குரியதே. கடி.

---

## விஜயவிகடன்.

இப்பெயர்புனைந்த வாரம்இருமுறை பிரசுரமாகும் விகடப்பத்திரிகையின் வருடசந்தா ரூபா 4. ஆறுமாதசந்தா 2 4 0. மூன்றுமாதசந்தா 1 4 0.

### விகடப் புத்தகங்கள்.

சென்னை விஜயவிகடன் பத்திராதிபர்எழுதிய விகடப்புத்தகங்கள்.

| | |
|---|---|
| அகடவிகடமஞ்சரி. | 0 1 6 |
| " இரண்டாவது பாகம். | 0 4 0 |
| திருப்புகழுக்கெதிர்ப்புகழென்னுங் கருப்புகழ் | 0 2 0 |
| படுதோஷிவிலாசம் (பங்குபங்காளிகள் பாகத்தைக்குறித்து நவீனமாகஎழுதியது.) | 0 12 0 |
| விழங்காபுரம் விகடக்கோட்டில்நடந்தவிசாரணை "காத்திருந்தவன்பெண்ணை நேற்றுவந்தவன் கொண்டுபோனகேஸ." | 0 8 0 |
| விகடவினோத விசித்திரக்கதை. (10 கதைகள் அடங்கியிருக்கின்றது.) | 0 8 0 |

குறிப்பு—மற்றுக் தமிழ், இங்கிலீஸ், தெலுங்கு, தலுசுகுப்புத்தகங்களும் ஸ்கூல் புத்தகங்களும் நோட்புக்கு லைகயருக்களும் கிடைக்கும். வி. பி. சார்ஜு பிரத்தியேகம்

விஜய விகடனுபீஸ,
மதுராஸ், என், ஈ.

---

ஷங்ஙாகாய்

## சீவியவீமாக்கொம்பனி.

(ஒரு பிரித்தானிய கொம்பனி.)

இக்கொம்பனியின் கிளைக்கொம்பனியொன்று கொழும்பிலே சுப்பிரீங்கோட்டுப் பிறக்தர் மெஸ், சாள்ஸ் பீரிஸ், டக்தர் டேவிட்றக்லூட், வர்த்தகர் மெஸ், வயிரமுத்து ஆகிய இவர்களின் நன்மதிகொண்டு அவர்கள்ன் பார்வையின்கிழ் நடைபெறுகிறது. எந்தவகுப்புச் சுதேசிகளு மேற்றுக்கொள்ளப்படுவார்கள்.

இந்தக் கொம்பனியின் வரும்படி முதல் ஆதியவைகளை எழுதி அறிந்துகொள்ளலாம்

F. R. சந்திரசேகரர்,
யாழ்ப்பாணம் முகாமைக்காரன்
சாம் சோலமன்,
மானேசர்.
கொழும்பு.

---


# STAMERENOTICE.



*Ceylon Steamship Coy Ltd:*

இலங்கைப் புகைக்கப்பற் கொம்னியாரின் கப்பல்கள் பின் வருந்தேதிகளில் மண்டை தீவிலிருந்து கொழும்புக்குப் போகவிருக்கின்றன

பரித்தித்துறைவழியாய்
லேடிமக்கலம் 1911ஞு
பங்குனிமீ 6வ. வியாழக்கிழமை
பாம்பன்வழியாய்
லேடிபிளேக 1911ஞு
பங்குனி மீ 3 வ. திங்கட்கிழமை

இக்கப்பல்கள் வழியாய்ச் சாமான்கள் அழைப்பிப்போர் பதிக்கப்பட்டவுடனே விலடி அல்லதுதந்திகொடுத்துத் தங்கள்சாமானை ஒப்புக்கொள்ளும்படி கேட்கப்படுகிறார்கள்

Wm Mather & Son
Agents

---

# Jaffna Commercial Corporation Ltd.

யாழ்ப்பாண வியாபாரசமுதாயம்

வங்கிக்கருகிலிருக்கும் எங்கள் புடவைச் சாப்பிலே யாழ்ப்பாணத்துக்கேற்ற பலவிதமான

காரிக்கன். மல, சித்தைச் சீலைகளும்
வடதேசத்திலிருந்தழைப்பிக்கப்பட்ட பெனுரிஸ், கஸ்மீயாச் சேலைகளும்
வெள்ளைச் சருகைச்சேலைகளும்,
பலதினுசான பொதுவான
சேலைகளும், சருகைச் சால்வைகளும்
கம்பிச்சால்வைகளும்
மலிவான விலைக்கு விற்கப்படும்.
இன்னும்யாழ்ப்பாணத்திற் பாவிப்புக்கேற்ற மாதிரியான



பண்வட்டிகள், பிக்கான்கள்.
புற்றுவெட்டிகள், காட்டுக் கத்திகளும்
இவ்விடம்விற்பனைக்கிருக்கின்றன

Wm MATHER
Managing Director

---

# CALICUT TILES.
# கலிற்கற் ஓடுகள்.

கலிக்கற்ஓடுகளே மற்றெல்லா ஓடுகளைப்பார்க்கிலும் விசேஷமுள்ளவை என்பது நெடுங்காலமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட காரியம். இவைகள் மிகவும் பெலனுள்ளவைகளும் லேசானவைகளுமன்றி மற்றெல்லாவித ஓடுகளைப்பார்க்கிலும் தண்ணீர் இளுப்பதில் மிகக் குறைவுள்ளவைகளாயுமிருக்கின்றன.

சென்னபட்டினத்திலுள்ள ஓர் பண்டிதரால்செய்யப்பட்ட சோதனையிலும் கலிக்கற் ஓடுகளே விசேஷமுள்ளவைகளாய்க் காணப்பட்டன. அரசாட்சியாரும தங்கள் கட்டிடங்களிற் கலிக்கற் ஓடுகளே போடுவிக்கின்றனர்.

மலிவான ஓடுகள் தேவைப்படுவோருக்காக முன்னிருந்த, முதலாம இரண்டாந்தரங்களைவிட மூன்றாந்தரஓடுகளும் இவ்வருடம்அழைப்பித்திருக்கிறோம் வந்துபார்க்கவும்.

| | | | |
|---|---|---|---|
| விலைவிபரம். 1-ந்தரம் | ஆயிரம் | 65 | ரூபா |
| 2-ந்தரம் | ஆயிரம் | 60 | ரூபா |
| 3-ந்தரம் | ஆயிரம் | 45 | ரூபா |

Wm. Mather & Sons
Agents.


---

Printed and published By S. Tambimuttoopillai a his Achuvaly Gnanapragasa Yunthira Office achuvly Puttoor Jaffna